| MSSRF<br>Science for Sustainable Development | **வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | மாவட்டம் : | சிவகங்கை | காலம் : | 23/04/2022 | முதல் | 27/04/2022 |
| | அறிக்கை எண் : | 032/ 2022 | வெளியீட்டு நாள் : | 22/04/2022 | | |

## சிவகங்கை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 37°-38° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 26° - 27° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| கடந்தவார வானிலை (19.04.2022 முதல் 21.04.2022) | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 27-04-2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 19/04 | 20/04 | 21/04 | | தேதி | நாள்-1 23/04 | நாள்-2 24/04 | நாள்-3 25/04 | நாள்-4 26/04 | நாள்-5 27/04 |
| 0.0 | 0.0 | 0.0 | | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 38 | 38 | 37 | | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 38 | 39 | 39 | 39 | 39 |
| 26 | 27 | 27 | | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 29 | 29 | 29 | 29 | 29 |
| 5 | 3 | 6 | | மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 3 | 3 | 3 | 2 |
| 62 | 76 | 83 | | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 44 | 55 | 54 | | | 50 | 50 | 50 | 50 | 50 |
| 4 | 5 | 5 | | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 6 | 6 | 6 | 6 | 6 |
| தென் கிழக்கு | கிழக்கு | தென் கிழக்கு | | **காற்றின் திசை** | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு |

## குறுஞ்செய்தி :

அடுத்த 5 நாட்களுக்கு அதிகபட்ச வெப்பநிலையானது 38°- 39° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 29° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 6 கி.மீ வேகத்தில், தென்கிழக்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

## அதிகபட்ச கி. வெப்பநிலை :

அடுத்த 7 நாட்களுக்கு மாவட்டத்தில் அதிகபட்ச கி. வெப்பநிலையானது பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 30° செல்சியஸ் முதல் 34° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

## குறைந்தபட்ச கி. வெப்பநிலை :

குறைந்தபட்ச கி. வெப்பநிலையை பொருத்தமட்டில், மாவட்டத்தில் அடுத்த 7 நாட்களுக்கு பொதுவாக இயல்பாக காணப்படும். 20° செல்சியஸ் முதல் 24° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

இடி மின்னல் எச்சரிக்கை:

வரும் 24.04.2022 தேதி தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் இடி மின்னலுக்கான வாய்ப்பு உள்ளது. கால்நடைகளை பாதுகாப்பான இடங்களில் கட்டி வைக்கவும். *கால்நடை வளர்க்கும் விவசாயிகள் கோடை காலங்களில் ஏற்படும் தீவனப்பயிர்கள் பற்றாக்குறையினை தவிர்க்கும் வகையில் பாசன வசதியுள்ள விவசாயிகள் 10 சதவீத நிலத்தில் கம்பு நேப்பியர் போன்ற தீவனப்பயிர்களை சாகுபடி செய்யலாம்.*

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள் : வாழை, மா, கால்நடை.**

**வாழை:**

வாழை பயிரிடும் விவசாயிகள் தங்களுடைய வாழை பயிருக்கு இரண்டு மாதத்திற்கு ஒரு முறை மண்வெட்டி அல்லது கொத்து கொண்டு மண் அணைக்க வேண்டும். மாதம் ஒரு முறை பக்கக் கன்றுகளை கவனமாக அகற்ற வேண்டும். காய்ந்த மற்றும் நோய் தாக்கப்பட்ட இலைகளைச் சேகரித்து எரித்து விட வேண்டும். இவ்வாறு செய்தால் வாழை பயிரைத் தாக்கும் இலைப் புள்ளி நோய் பரவுவதை பெரிதும் கட்டுப்படுத்தலாம்.

**மா:**

நிலவும் பருவச் சூழ்நிலையில் மா பயிரில் இலைப் பிணைக்கும் புழுவின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இவ்வகைப் புழுக்கள் மெல்லிய நூலிழையினால் அடுத்தடுத்த இலைகளை பிணைத்துக் கொண்டு உள்ளிருந்து பச்சையத்தை சுரண்டி உண்ணும். இலைகள் காய்ந்து விழுந்து விடும். இதனைக்கட்டுப்படுத்த 10 லிட்டர் தண்ணீருக்கு 40 மில்லி என்ற அளவில் வேப்பஎண்ணெய் மற்றும் 10 மில்லி ஒட்டுப்பசை சேர்த்து 12 நாட்கள் இடைவெளியில் இரண்டு முறை தெளிக்கவும்.

**கால்நடை:**

நிலவும் வெப்பமான சூழ்நிலையில் கால்நடை கொட்டகைகளை முறையாக பராமரித்தல் மிகவும் அவசியமாகும். கொட்டகைகளின் திசையமைப்பு நல்ல காற்று வசதி கிடைக்கும் படியாகவும் அதே நேரத்தில் சூரிய வெப்பம் கால்நடைகளை நேரடியாகத் தாக்காதவாறும் அமைக்க வேண்டும். அதாவது கொட்டகைகளின் நீள வட்டம் கிழக்கு மேற்காக அமைவது நல்லது. வேகமாக காற்று வீசும் இடங்களில் மரங்கள் வளர்த்தால் காற்றின் வேகத்தை ஓரளவு குறைக்க உதவும்.